# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

**சக்கராம்பாளையம், அகரம்(அ), எலச்சிப்பாளையம்,**

**திருச்செங்கோடு(தா), நாமக்கல்(மா) - 637202**

**Cell : 99655-31727, 94432-31727**


## காலாண்டுப் பொதுத்தேர்வு – செப்டம்பர் 2018 (22.09.2018)

வகுப்பு: **X** **சமூகஅறிவியல் விடைக்குறிப்பு** **மதிப்பெண்கள் : 100**

| Q.NO | SECTION-I | MARKS |
|---|---|---|
| **1** | அ. இரயில்வே | 1 |
| **2** | இ. மைய நாடுகள் | 1 |
| **3** | இ. சான் பிரான்சிஸ்கோ | 1 |
| **4** | இ. ரோம் உடன்படிக்கை | 1 |
| **5** | ஆ. 1990 | 1 |
| **6** | இ. 18 | 1 |
| **7** | ஈ. புதுடெல்லி | 1 |
| **8** | அ. சமமான காலநிலை | 1 |
| **9** | ஈ. குருசிகார் | 1 |
| **10** | ஆ. கோதுமை | 1 |
| **11** | இ. பெங்களுரு | 1 |
| **12** | மொத்தநாட்டு உற்பத்தி (-) தேய்மானம் | 1 |
| **13** | ஆ. 950 டாலர்கள் | 1 |
| **14** | இ. 25.8% | 1 |
| **15 (1)** | செவ்ரேஸ் உடன்படிக்கை - **துருக்கி** | 1 |
| | பாதுகாப்பு பரிவர்த்தனை சட்டம் - **பங்குச்சந்தை உரிமம்** | 1 |
| | டியூஸ் - **முசோலினி** | 1 |
| | அட்லாண்டிக் சாசனம் - 1941 | 1 |
| | இராபர்ட் ஸ்கூமான் - **பிரான்ஸ் வெளியுறவு** | 1 |
| **ii** | பிரம்மபுத்ரா ஆறு- சாங்போ | 1 |
| | எல்நினோ - வானிலை நிகழ்வு | 1 |
| | நீர்மின்சக்தி - சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி | 1 |
| | தங்கஇழைப்பயிர் - சணல் | 1 |
| | வாகன தொழிலகம் - சென்னை | 1 |
| **16** | **‘தைபிங் கலகம்’**<br>• நான்கிங் உடன்படிக்கையை பின்பற்றி அமெரிக்கர்களும், பிரெஞ்சுக்காரர்களும் மற்றும் பிற அந்நிய நாட்டவர்களும் பல ஒப்பந்தங்களை சீனாவுடன் ஏற்படுத்தி கொண்டனர்.<br>• எனவே **1854**ஆம் ஆண்டு மஞ்சு அரசுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக சீனர்கள் கலகத்தில் ஈடுபட்டனர்<br>• இக்கலகம் தைபிங் கலகம் என்றழைக்கப்பட்டது.<br>• இக்கலகம் விரைவில் ஒடுக்கப்பட்டது. | 2 |

| | | |
|---|---|---|
| **17.** | **. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்**<br>• பொதுச்சபை<br>• நிர்வாக சபை (மன்றம்)<br>• செயலகம்<br>• சர்வதேச நீதி மன்றம்<br>• சர்வதேச தொழிலாளர் அமைப்பு | 2 |
| **18** | **பொருளாதாரப் பெருமந்தம் தோன்றக் காரணங்கள்**<br>• அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவே பொருளாதாரப் பெருமந்தத்திற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.<br>• பங்குகளின் விலை உயரும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மக்கள் கடன் வாங்கி பங்குச்சந்தைகளில் முதலீடு செய்தது இப்பெருமந்தத்திற்கு காரணம் ஆகும். | 2 |
| **19** | **முசோலினி அதிகாரத்தைக் கைப்பற்றுதல்**<br>• **1922ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம்** நாள் முசோலினி தலைமையில் பாசிஸ்டுகள் ரோம் நகரை நோக்கி அணிவகுத்துச் சென்று தங்கள் பலத்தைக் காட்டினர்<br>• இதையறிந்த அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் அரசாங்கத்தை அமைக்கும்படி முசோலினிக்கு வேண்டுகோள் விடுத்தார். இதனைத் தொடர்ந்து எத்தகைய இரத்தமும் சிந்தாமல் பாசிஸ்டுகள் அதிகாரத்தை கைப்பற்றினர்.<br>• இருப்பினும் பின்னர் அடக்குமுறை, கொலை மற்றும் நாடுகடத்துதல் பெருகின.<br>• இறுதியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி இத்தாலியில் மலர்ந்தது. இந்த சர்வாதிகார ஆட்சி கி.பி 1922முதல் கி.பி 1945 வரை நீடித்தது. | 2 |
| **20** | • **1923ஆம்** ஆண்டு அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இதற்கு ‘பீர் மண்டபப் புரட்சி என்று பெயர்.<br>• இதனால் அவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். 5 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்<br>• சிறையில் இருந்தபோது **மெயின் காம்ப் (Mein Kampf) எனது போராட்டம்** என்ற நூலை எழுதினார். இந்நூல் **நாசிசத்தின் வேத நூலாக** விளங்கியது.<br>• பின்னர் ஹிட்லர் விடுதலையானார். | 2 |
| **21** | • **1939ஆம் ஆண்டு** ஹிட்லர் ஜெர்மனியையும் கிழக்குப் பிரஷ்யாவையும் போலந்து வழியாக இணைக்கும் இராணுவச்சாலை அமைக்கும் உரிமையை வழங்குமாறு போலந்து நாட்டை நிர்பந்தித்தார் மற்றும் டான்சிக் துறைமுகத்தைத் தன்னிடம் ஒப்படைக்கவும் வலியுறுத்தினார்.<br>• இதனைப் போலந்து மறுக்கவே **1939ஆம்** ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி ஹிட்லர் அந்நாட்டின் மீது மின்னல் வேகத்தாக்குதல் நடத்தி | 2 |

| | | |
|---|---|---|
| | போலந்தைக் கைப்பற்றினார்.<br>• இதுவே, இரண்டாம் உலகப்போர் ஏற்பட உடனடிக் காரணமாயிற்று. | |
| **22** | **ஐ.நாவின் சிறப்பு நிறுவனங்கள்.**<br>• ஐ.நா.சபை பல்வேறு சிறப்பு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில<br>• உலக சுகாதார நிறுவனம் (WHO)<br>• ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு ( UNESCO)<br>• ஐ.நா. குழந்தைகள் அவசர கால நிதி நிறுவனம். (UNICEF)<br>• பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (ILO)<br>• உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் (FAO)<br>• உலக வங்கி (IBRD) | 2 |
| **23** | **. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன நாடுகள்**<br>• பெல்ஜியம்,<br>• பிரான்சு,<br>• இத்தாலி,<br>• லக்ஸ்ம்பர்க்,<br>• நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தை நிறுவன நாடுகள் ஆகும். | 2 |
| **24** | **உலக அமைதி ஒரு அவசியமானது**<br>• உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும்.<br>• உலக அமைதி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமின்றி வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு அவசியமானதாகும் | 2 |
| **25** | **தேசியக்கட்சிகள்**<br>• இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்குஅல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள் என்றழைக்கப்படும்.<br>• **உ.ம் காங்கிரஸ், பா.ஜ.க.** | 2 |
| **26** | **இமயமலைகளின் முக்கியத்துவதம் (ஏதேனும் இரண்டு)**<br>• இந்தியாவின் வடபகுதியில் உள்ள இமயமலைகள் தென்மேற்கு பருவக் காற்றினைத் தடுத்து, நல்லமழைப் பொழிவையும், பனிப்பொழிவையும் நமக்குத் தருகிறது. இம்மலைகள் இல்லாதிருப்பின், இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதி வெப்பமானதாகவும், வறண்ட பாலைவனமாகவும் மாறியிருக்கக்கூடும்.<br>• இமயமலைகள் இந்தியத் துணைக் கண்டத்தின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளன.இங்கு பனி எப்பொழுதும் உறைந்து காணப்படுவதால் அந்நிய படையெடுப்பைத் தடுகிறது.<br>• இமயமலை கங்கை மற்றும் பிரம்மபுத்திரா போன்ற பல வற்றாத ஜீவநதிகளின் பிறப்பிடமாக அமைந்துள்ளது.<br>• இது பல கோடை வாழிடங்களையும் மற்றும் பல புனிதத்தலங்களையும் கொண்டுள்ளது.<br>• இது காடுசார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை வழங்குகிறது | 2 |

| | | |
|---|---|---|
| **27** | **தீபகற்ப ஆறுகள் ஏதேனும் நான்கு மட்டும்**<br>**1. மகாநதி 2. கோதாவரி 3. காவிரி**<br>**4. கிருஷ்ணா 5. நர்மதை 6. தபதி** | 2 |
| **28** | **பருவக்காற்றின் வகைகள்**<br>**தென்மேற்குப் பருவக்காற்று**<br>**வடகிழக்குப் பருவக்காற்று** | 2 |
| **29** | **இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள்**<br>• ஆந்திரபிரதேசம்<br>• ஜார்கண்ட்<br>• பீகார்<br>• ராஜஸ்தான் | 2 |
| **30** | பயிர் சுழற்சி முறை என்பது பல்வேறு பயிரினை ஓரே நிலத்தில் வரிசைக் கிரமமாக ஓரே வருடத்தில் பயிரிடுவது ஆகும் | 2 |
| **31** | 200 செ.மீ முதல் 300 செ.மீ மழைபெறும் பகுதிகளாவன மத்திய கங்கைச்சமவெளி மேற்கு மலைத்தொடர் கிழக்கு மஹாராஷ்டிரம் மத்தியப்பிரதேசம் மற்றும் ஒடிசா | 2 |
| **32** | **தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள்**<br>• தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள்.<br>• மூலப்பொருட்கள்<br>• எரிச்சக்தி<br>• போக்குவரத்து<br>• மனிதசக்தி<br>• நீர்வளம்<br>• சந்தை மற்றும் அரசாங்கக் கொள்கைகள். | 2 |
| **33** | **சணல் பொருள்கள்**<br>• சணல் பொருட்கள், சணல் பைகள், கூடாரத்துணி, சிப்பப்பைகள், வலைப்பைகள், கோணிப்பைகள், கெட்டியான துணி மற்றும் பல.<br>• தற்பொழுது சணல் பிளாஸ்டிக் நாற்காலிகள், மின்கம்பியின் உறைகள், கம்பளியுடன் சணல் சேர்த்து துணிகள் தயாரிப்பதிலும் பயன்படுத்தப்படுகிறது.<br>• பருத்தியிழையுடன் சணல் சேர்த்து கம்பளங்கள் மற்றும் விரிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. | 2 |
| **34** | பணிகள் துறை என்பது செய்தி தொலைத்தொடர்பு போக்குவரத்து வணிகம் வங்கிகள் **காப்பீட்டு நிறுவனங்களைக் குறிக்கும்** | 2 |

| | | | |
|---|---|---|---|
| **வேறுபடுத்துக ஏதேனும் இரண்டு தொடர்புடையக் கருத்துக்கள்** | | | |
| 36 | கீரீன்விச் தீர்க்க கோடு | இந்தியதிட்டநேரம் | 2 |
| | $0^{\circ}$ தீர்க்கம் இங்கிலாந்தின் கிரீன்விச் வழியாக செல்கிறது. | $82^{\circ}30$ கிழக்கு தீர்க்கம் இந்தியாவின் நடுவே அலகாபாத் வழியாக செல்கிறது. | |

| | | | |
|---|---|---|---|
| | 0° தீர்க்கத்தின் நேரம் கிரீன்விச் தீர்க்க நேரம் எனப்படுகிறது | இந்திய திட்ட நேரம் கிரீன்விச் தீர்க்க நேரத்தை விட 5½ மணி முன்னதாக உள்ளது | |
| | உலகத்தின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. | இது இந்தியாவின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. | |
| 37 | **மேற்கு கடற்கரைச் சமவெளி** | **கிழக்கு கடற்கரைச் சமவெளி** | |
| | மேற்கு கடற்கரைச் சமவெளி மேற்கு தொடர்ச்சி மலைத் தொடருக்கும், அரபிக்கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது. | கிழக்கு கடற்கரைச் சமவெளி கிழக்கு தொடர்ச்சி மலைத்தொடருக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. | 2 |
| | இது வடக்கில் கட்ச் பகுதியில் உள்ள ரான் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. | இது மேற்கு வங்க ஆற்றுச் சமவெளியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. | |
| | இது குஜராத்தை தவிர மற்ற பகுதிகளில் குறுகலாக காணப்படுகிறது. | இது மேற்கு கடற்கரைச் சமவெளியை விட பரந்தும், அகலமாகவும் காணப்படுகிறது | |
| 38 | அதிக மழைபெறும் பகுதி | குறைவான மழைபெறும் பகுதி | |
| | 200 செ.மீ முதல் 300 செ.மீ மழைபெறும் பகுதி | 50 செ.மீக்கும் குறைவாக மழை பெறும் பகுதி | 2 |
| | மத்திய கங்கைச்சமவெளி மேற்கு மலைத்தொடர் கிழக்கு மஹாராஷ்டிரம் மத்தியப்பிரதேசம் மற்றும் ஒடிசா | காஷ்மீரின் வடபகுதி மேற்கு ராஜஸ்தான் தென் பஞ்சாப் மற்றும் | |
| 39 | உலோக கனிமங்கள் | உலோகமற்ற கனிமங்கள் | |
| | இவை இரும்பு செம்பு மாங்கனீசு பாக்சைட் மற்றம் தங்கம் போன்ற உலோகங்களைக் கொண்டுள்ளன. | இவை மைக்கா சுண்ணாம்புக்கல் ஜிப்சம் பொட்டாசியம் நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் ஆகும் | 2 |
| | இவை இரும்பு சார்ந்த கனிமங்கள் மற்றும் இரும்பு சாராத கனிமங்கள் என இரு வகைகளாக பிரிக்கலாம் | இவை பிரிக்க இயலாது. | |
| 40 | காற்று சக்தி | அனல் மின்சக்தி | |
| | காற்று வேகமாக வீசும் பகுதிகளில் காற்றாலைகள் நிறுவப்பட்டு காற்று சக்தி தயாரிக்கப்படுகிறது. | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. | 2 |

| | | | |
|---|---|---|---|
| | தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகா, குஜராத், கேரளா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும் லட்சத்தீவிலும் காற்றுசக்தி உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. | அஸ்ஸாம், ஜார்கண்ட், உத்திரபிரதேசம், மேற்குவங்கம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அனல் மின்சக்தியை பெரிதும் சார்ந்துள்ளன. | |
| 41 | பணப்பயிர்கள் | தோட்டப்பயிர்கள் | |
| | ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை நம்நாட்டிற்கு ஈட்டித்தருகின்றன. | இவை ஒரு பானப்பயிர்களாகும் | 2 |
| | கரும்பு பருத்தி சணல் எண்ணெய்வித்துக்கள் புகையிலை ரப்பர் போன்றவை | தேயிலை இரப்பர் காபி முதலியன | |
| 42 | **ஒரு பயிர் சாகுபடி** | **இரு பயிர் சாகுபடி** | |
| | இது ஒரு பயிர் மட்டும ஒரே இடத்தில் ஒரு போகம் மட்டும் பயிரிடப்படுகின்றன. | இருபோக பயிர் ஒரே இடத்தில் பயிரிடப்படுகின்றன. | 2 |
| | **எ.கா. நெல்,மக்காச்சோளம் ,எண்ணெய் வித்துகள், கரும்பு** | **எ.கா. கோதுமை, கடுகு,நெல்,உளுந்து** | |
| 43 | **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்** | **கனிமம் சார்ந்த தொழிலகங்கள்** | |
| | வேளாண் சார்ந்த தொழிலகம் வேளாண் பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்து கின்றன. | கனிமம் சார்ந்த தொழிலகம் உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன. | 2 |
| | **எ.கா. பருத்தி ஆலை, சணல் ஆலை, சர்க்கரை ஆலை** | **எ.கா. இரும்பு, எஃகு தொழிலகங்கள்.** | |
| 44 | **பிளாசி மற்றும் பக்சார் போர்** | | |
| அ | 1757ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் சிராஜ் உத் தௌலா | | 1 |
| ஆ | துணைப்படைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் வெல்லெஸ்லி பிரபு | | 1 |
| இ | வாரிசு இழப்புக் கொள்கை டல்ஹௌசி பிரபுவின் கொள்கையாகும். | | 1 |
| ஈ | **1858ஆம்** ஆண்டு விக்டோரியா மகாராணியின் பிரகடனம் வெளியிடப்பட்டது. | | 1 |

| | | |
|---|---|---|
| 45 | **பாசிசக் கட்சி** | |
| அ | பொனிடோ அமில்கேர் ஆண்டிரியா முசோலினி | 1 |
| ஆ | நம்பு கீழ்ப்படி போராடு அதிகப்படை, அதிக மதிப்பு என்ற முழக்கத்தை நடைமுறைப்படுத்தினார் | 1 |
| இ. | நாட்டை உயர்நிலைக்குக் கொணர்தல்<br>தனிமனிதனின் உடைமைகளைப் பாதுகாத்தல்<br>ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை. | 1 |
| ஈ | எல்லாம் நாட்டிற்காகவே.<br>நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை<br>நாட்டிற்கு வெளியே எதுவுமில்லை | 1 |
| 46 | **இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்** | |
| அ. | அமெரிக்க படைத்தளபதி ஜெனரல் மெக் ஆர்தர் தலைமையில் ஜப்பானைக் கைப்பற்றியது | 1 |
| ஆ | அமெரிக்காவும், இரஷ்யாவும் இரண்டாம் உலகப்போருக்குப் பின் இரு வல்லரசுகளாகத் தோன்றின. | 1 |
| இ. | இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, மலேசியா பிலிப்பைன்ஸ் தீவுகள் இந்தோசீனா இந்தோனேசியா | 1 |
| ஈ | 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது | 1 |
| 47 | **ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்:** | |
| அ. | 1963ஆம் ஆண்டு அணு சோதனை தடைச்சட்டம் (NTBT) 1996ஆம் ஆண்டு தொடர் அணு சோதனை தடைச் சட்டத்தையும் (CTBT) நிறைவேறச் செய்தது. | 1 |
| ஆ. | ❖ 1992 ல் ரியோ-டி- ஜெனிரோவில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது. | 1 |
| இ | ❖ ‘அறிக்கை 21’ என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டன. | 1 |
| ஈ | ❖ ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டுவந்தது. | 1 |
| **48** | **அ) ஏகாதிபத்தியதின் விளைவுகள் :**<br>**சாதகமான விளைவுகள் :**<br>1. வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்புத்துறையில் பலமுன்னேற்றங்களை ஏற்படுத்தின.<br>2. அந்நாடுகள் குடியேற்ற நாடுகளுக்கு கல்வி வழங்கி, மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறைகளை மேம்படுத்தின.<br>3. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தன.<br>4. இத்தகைய மாற்றங்கள் குடியேற்ற நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின.<br>5. இது நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமையை வளர்த்தன.<br>**பாதகமான விளைவுகள் :**<br>1. குடியேற்ற நாடுகள் தங்களின் சுதந்திரத்தை இழந்தன.<br>2. மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டதோடு அவர்கள் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர்.<br>3. குடியேற்ற நாடுகள் மூலப்பொருள்களை வழங்குவதற்கும் பொருள்களின் | |

| | | |
|---|---|---|
| | விற்பசைன் சந்தைகளாகவும் மட்டுமே விளங்கின.<br>4.அந்நாடுகளில் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு, ஏழ்மையும் வேலையின்மையும் அதிகரித்தன.<br>5. பாரம்பரிய விவாசய முறை மாற்றப்பட்டு, உணவுப்பொருள் உற்பத்திக்குப் பதிலாக மூலப்பொருள்களை பயிரிடும்படி அந்நாட்டு மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். மேற்கத்திய கலாச்சார அறிமுகம், பாரம்பரிய கலாச்சாரத்தின் அழிவுக்கு வழிகோலியது.<br>6. அடிமை வியாபாரத்தின் காரணமாக சில ஆப்பிரிக்க இனங்களின் மறைவுக்கும் இது காரணமாயிற்று. சில குடியேற்ற நாடுகளில் இன வேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட, ஏகாதிபத்தியமே காரணமாயிற்று.<br>**(அல்லது)** | |
| | **ஆ) பிராங்களின் டி. ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள்** :<br>❖ பொருளாதாரப் பெரும் தாழ்வை முடிவுக்குக்கொண்டுவர எப்.டி.ரூஸ்வெல்ட்(FDR) புதிய பயனுரிமை என்ற புதிய சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.<br>❖ புதிய சீரமைப்பு திட்டத்தின் அடிப்படையில் டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் மூலம் இயற்கைவளத்தைக் கொண்டு தொழிற் பெருக்கத்தைக் கொண்டு தொழிற் பெருக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் விவசாயததை ஊக்குவிப்பது ஆகும். அதன்படி அணைகள் கட்டுதல், மின்உற்பத்தி செய்தல், கப்பல் போக்குவரத்துக்கு வழி வகுத்தல், வெள்ளத்தடுப்புப் பணிகளில் ஈடுபடுதல், மண்வளப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் போன்றவை மேம்படுத்தப்பட்டன.<br>❖ கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம் மூலம் 500 மில்லியன் டாலர்கள் மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாக வழங்கப்பட்டது.<br>❖ கூட்டாட்சி ரிசர்வ் வங்கி அமைக்கப்பட்டு வங்கி நிறுவனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கடன் வழங்கப்பட்டது.<br>❖ பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் மூலம் பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.<br>❖ தேசிய தொழில்மீட்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணிநேரக்குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.<br>❖ வேளாண்மைப் பொருள் சீரமைப்பு சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் அரசு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க வகை ஏற்பட்டது. இம்மானியம் அவர்கள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து விலை உயர்வுக்கு வழிவகுத்தது. **(அல்லது)** | |
| | **இ) ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்** :<br>❖ பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு ஐ.நா. சபை அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு கண்டு உலக அமைதியைப் பாதுகாத்து வருகிறது. அரசியல் பிரச்சனைகளுக்கு பாதுகாப்பு மன்றம் மூலமும், சட்டப்பிரச்சனைகளுக்கு பன்னாட்டு நீதி மன்றம் மூலமும், பிற பிரச்சனைகளுக்கு சிறப்பு அமைப்புகள் மூலமும் தீர்வு காணப்படுகிறது.<br>❖ இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம், ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்களை முடிவக்கு கொண்டு வந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்த இரஷ்யப்படைகளை வெளியேறும்படியும் செய்தது.<br>❖ 1963 ஆம் ஆண்டு அணு சோதனை தடைச்சட்டத்தையும் 1996 ஆம் ஆண்டு தொடர் அணு சோதனை தடைச்சட்டத்தையும் நிறைவேறச் செய்தது.<br>❖ 1992 ல் ரியோ-டி-ஜெனிரோவில் ஐ.நாவின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் அறிக்கை 21 என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து பெருளாதார | |

| | | |
|---|---|---|
| | மேம்பாடடைய உறுதிபூண்டன.<br>❖ ஐ.நாவின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பன்னாட்டு ஆய்வு மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சி நிறுவனங்களின் மூலம் 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கைத தரத்தினை உயர்த்துவதற்கான நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் ஊக்குவித்தன.<br>❖ 1956 ஆம் ஆண்டில் எகிப்து அதிபர் நாசர், சூயஸ் கால்வாயை நாட்டுடமையாக்கினார். இதனை பிரிட்டன், பிரான்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிர்த்தன. ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டு வந்தது.<br>❖ இத்தோடு மட்டுமல்லாமல் கொரிய வியட்நாம் போர்களையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. | |
| 49 | **அ) பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை** :<br>**பஞ்சசீலம் :**<br>இந்தியா 'ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு' என்றழைக்கப்படுகிறது. இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால்நேரு 1955 இல் பாண்டுங் மாநாட்டில் அமைதிக்காக 5 அம்சக்கொள்கையினை வெளியிட்டார். அவை 'பஞ்சசீலம்' என அழைக்கப்படுகிறது.<br>❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்.<br>❖ எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக்கூடாது.<br>❖ ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக்கூடாது.<br>❖ அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பரநல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.<br>❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.<br>❖ இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.<br>**அணிசேராக் கொள்கை:**<br>❖ இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாக பிரிந்தன.<br>❖ அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளும் தங்களது செல்வாக்கை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகளில் இறங்கின.<br>❖ இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன.<br>❖ இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணி சேரா நாடாக) விளங்கி வருகிறது.<br>❖ இந்த இரண்டு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு, தொடர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது.<br>**(அல்லது)** | |
| | **ஆ) இந்தியாவில் தேர்தல் முறைகள்** :<br>இந்தியாவில் நேரடித் தேர்தல் மூலமாகவோ(அ) மறைமுகத் தேர்தல் மூலமாகவோ குடிமக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர்.<br>❖ நேரடித் தேர்தல் முறை<br>குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் முறை எனப்படும்.<br>இந்தியாவில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இம்முறையிலேயே அமைந்துள்ளது.<br>❖ மறைமுகத் தேர்தல் முறை | |

| | | |
|---|---|---|
| | குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல், தங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினா்களைத் தோ்ந்தெடுக்கும் முறை மறைமுகத்தோ்தல் முறையாகும்.<br>நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினா்கள், குடியரசுத் தலைவா் மற்றும் குடியரசுத் துணைத்தலைவா் இம்முறைமூலம் தோ்ந்தெடுக்கப்படுகின்றனா்.<br>❖ இடைத்தோ்தல்கள்<br>சில சமங்களில் ஏதாவது ஒரு தொகுதியில் தோ்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளா் மரணமடையலாம். அல்லது பதவியை விட்டு விலகலாம். அத்தகையச் சூழ்நிலையில் அந்தத் தொகுதிகளில் மட்டும் தோ்தல் நடைபெறும். இவ்வாறு நடைபெறும் தோ்தல்களுக்கு இடைத்தோ்தல்கள் என்று பெயா்.<br>❖ இடைப்பருவத் தோ்தல்கள்<br>சிலசமயங்களில் நாடாளுமன்றமோ, அல்லது மாநில சட்ட சபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் (தற்போது ஐந்தாண்டுகள்) பல்வேறு காரணங்களால் செயல்படமுடியாது இடையில் கலைக்கப்படாமல் மீண்டம் அவற்றுக்குத் தோ்தல் நடத்தப்படும். இதற்கு இடைப்பருவத் தோ்தலகள் என்று பெயா்.<br>**(அல்லது)** | |
| | **இ) ஜனநாயகத்தில் எதிா்க்கட்சியின் பங்கு** :<br>❖ மக்களாட்சியின் வெற்றி என்பது எதிா்க்கட்சிகளின் செயல்பாட்டை ஒட்டியே அமைகிறது.<br>❖ மக்களாட்சியில் எல்லா கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைப்பது அரிதாகும். இச்சமயங்களில் குறைந்த இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் எதிா்கட்சியாகும்.<br>❖ லோக் சபாவில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக இடங்களைப் பெறும் கட்சி அங்கீகரிக்கப்பட்ட எதிா்கட்சியாகும்.<br>❖ எதிா் கட்சித் தலைவா் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளாா். அரசியல் சட்டப்படி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்ற ஆளும் கட்சிகள் எவ்வாறு முக்கியமானதாக கருதப்படுகிறதோ அது போலவே எதிா்கட்சிகளின் பங்கும் மக்களாட்சியில் இன்றியமையாததாகும்.<br>❖ ஆளும் கட்சிகள் ஏதேச்சதிகார மனப்பான்மையுடன் செயல்படாமல் இருக்கவும், அவா்களின் அதிகாரங்களை வரையறுத்திடவும், அவா்களைக் கண்காணிக்கவும் எதிா்க்கட்சிகள் முக்கிய பணிகளை மேற்கொள்கின்றன. இவா்களது முக்கிய பணி ஆளும் கட்சி கொள்கைகளை விமா்சிப்பதாகும். மேலும் ஆளும் கட்சிக் கொள்கைகளின் விமா்சனங்களை சட்ட மன்றங்களுக்கு வெளியெ இருந்து பத்திரிக்கை மற்றும் இதர ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்துவது இவா்களது வேலையாகும்.<br>❖ எதிா்கட்சிகளுக்கு அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்து கொள்ள முழு உரிமையிருக்கின்றது. கேள்வி நேரங்களில், ஆளும் கட்சியினரை விமா்சிப்பதன் மூலம், தவறான முறையில் ஆளுங்கட்சியினா் அதிகாரங்களை பயன்படுத்துவற்கு எதிா்கட்சியினா் தடைக்கற்களாக இருக்கின்றனா். | |
| 50 | **அ) தென்மேற்கு பருவக்காற்று**<br>அரபிக்கடல் கிளை:<br>❖ பருவக்காற்றின் அரபிக்கடல்கிளை ஓா் வலிமைமிக்க காற்று. இது அதிக | 5 |

மழைப்பொழிவை தருகிறது. அரபிக்கடலில் இருந்து வீசும் இக்காற்றின் ஒரு பகுதி முதலில் மேற்கு தொடர்ச்சி மலை மீது மோதுகிறது.

❖ ஈரப்பதமிக்க இக்காற்று மலைச்சரிவுகளின் வழியே உயரே எழும்பி, குளிர்வடைந்து மேற்கு கடற்கரை பகுதிக்கு பலத்த மழையைத் தருகிறது.

❖ மேற்குதொடர்ச்சி மலையின் காற்று மோதும் திசையில் அமைந்துள்ள மும்பை 150 செ.மீ மழையையும் மேற்கு தொடர்ச்சி மலையின் மறைவிலுள்ள மழை மறைவு பிரதேசத்தில் உள்ள பூனா 50செ.மீ மழையையும்பெறுகின்றன.

❖ இதன் இரண்டாவது பகுதி விந்திய சாத்பூரா மலைகளின் வழியே சென்று ராஜ்மகால் குன்றுகளின் மீது மோதி சோட்டா நாகபுரி பீடபூமிக்கு அதிக மழைப் பொழிவைத் தருகிறது.

❖ இக்காற்றின் மூன்றாவது பகுதி ராஜஸ்தானை நோக்கி நகர்கிறது. அங்கு ஆரவல்லி மலைத்தொடர் காற்று வீசும் திசைக்கு இணையாக உள்ளது. அதனால் இக்காற்று மலை மீது மோத இயலாததால் ராஜஸ்தானின் ஒரு பகுதி பாலைவனமாக அமைந்துள்ளது.

❖ இப்பிரிவானது இமாசலபிரதேசத்தை அடைந்து பின் வங்காள விரிகுடா கிளைக் காற்றுடன் கலந்து விடுகிறது.

❖ இவை சிவாலிக் குன்றுகளால் தடுக்கப்படுவதால் அவற்றின் மலையடிவாரத்தில் நல்ல மழைப்பொழிவை தருகின்றன.

**(அல்லது)**

**வங்காள விரிகுடா கிளை**

- ❖ வங்காள விரிகுடாவில் இருந்து வீசும் இக்காற்றானது ஈரப்பதத்தை தாங்கிவரும் காற்றாகும்.
- ❖ இது காசி காரோ ஜெயந்தியா குன்றுகளின் மீது மோதுகிறது. ஈரப்பதம் தாங்கிவரும் இக்காற்றானது புனல்வடிவ குன்றுகளின் மீது மோதி திடீரென மேல் எழும்புவதால் இந்தியாவிலேயே அதிக மழை பெறும் இடமான மௌசின்ராம்க்கு கனமழையைத் தருகிறது.
- ❖ இக்காற்றின் ஒரு பகுதி இமயமலைகளால் தடுக்கப்பட்டு மேற்கு நோக்கி நகர்ந்து கங்கை சமவெளிக்கு மழையைத் தருகிறது.
- ❖ இது மேலும் மேற்கு நோக்கி நகர நகர தம்மிடமுள்ள ஈரப்பதத்தை இழப்பதால் பஞ்சாப் மற்றும் ஹரியானாவிற்கு மிகக் குறைந்த அளவு மழையைத் தருகிறது.
- ❖ இறுதியாக வங்காள விரிகுடா கிளை காற்று அரபிக்கடல் கிளையுடன் சேர்ந்து இமயமலையின் அடிவாரமான சிவாலிக் குன்று பகுதிகளுக்கு அதிக மழைப் பொழிவைத் தருகின்றன.
- ❖ இந்த பருவத்தில் தமிழ்நாட்டில் வறண்ட நிலையே காணப்படுகிறது. ஏனெனில் இது அரபிக்கடல் கிளை காற்றுக்கு மழை மறைவுப் பகுதியிலும் வங்காள விரிகுடா கிளை காற்றுக்கு இணையாகவும் அமைந்துள்ளது.

**(அல்லது)**

**ஆ. இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம்**

இயற்கை வளங்களை எடுத்துக்கொண்டேயிருப்போமானால் **எதிர்**காலத்தில் எவ்வித வளங்களும் கிடைக்காமல் போகலாம். இயற்கையைப் பாதுகாக்கும் அவசரத்தேவை தற்போது உள்ள தேவைகளில் சில பின்வருமாறு

1. வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் சூழியல் சமநிலையை பராமரித்தல்
2. பல்வகை உயிரினங்களையும் பாதுகாத்தல் 5
3. தற்காலத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வளங்கள் கிடைப்பதற்கு வழிவகுத்தல்
4. மனித இனம் வாழ்வதற்கு உறுதியளித்தல்


**(அல்லது)**

| | | |
|---|---|---|
| | **இ. மும்பையில் பருத்தியாலைகள் அமைய சாதகமான காரணிகள்**<br>மகாராஷ்டிரத்திலுள்ள மும்பை பருத்தி ஆலைகள் முன்னிலை வகிக்கின்றது. மேலும் இது இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.<br>கீழ்க்கண்ட காரணிகள் மும்பை பருத்தி ஆலைகளுக்கு சாதகமாக உள்ளன.<br>❖ துறைமுகத்தின் அமைவிடம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக உள்ளது.<br>❖ பருத்தி விளையும் இடங்களுக்கும் ஆலைகளுக்கும் இடையில் தேவையான இரயில் மற்றும் சாலை போக்குவரத்து இணைப்பு உள்ளது.<br>❖ நூலிழை தயாரிப்பிற்கு ஈரப்பதம் கொண்ட காலநிலை உதவுகிறது.<br>❖ மூலதனப்பொருட்கள் மற்றும் நிதி வசதி எளிதாக கிடைக்கின்றன.<br>❖ பணியாட்கள் ஏராளமாக கிடைக்கின்றனர் | 5 |
| 51 | **அ. நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படைக் கருத்துக்கள் (ஏதேனும் 2 மட்டும்)**<br>**<u>மொத்த நாட்டு உற்பத்தி</u>** (GNP – Gross National Product)<br>ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பும் அந்நாட்டு மக்கள் ஓராண்டில் ஈட்டிய வருமானமும் வெளிநாட்டின் முதலிட்டின் மூலம் கிடைக்கும் இலாபமும் சேர்ந்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்<br>**<u>நிகர நாட்டு உற்பத்தி</u>**<br>• (NNP – Net National Product) மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானச் செலவை கழித்தபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.<br>**<u>நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி (-) தேய்மானச் செலவு.</u>**<br>• உற்பத்தியில் மூலதனப் பொருட்களின் (இயந்திரங்கள்) பழுதை சரி செய்ய மேற்க் கொள்ளப்படும் செலவினங்கள் தேய்மானச் செலவு என்றழைக்கப்படுகிறது.<br>**<u>தலா வருமானம்</u>**<br>• நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் என்றழைக்கப்படுகிறது.<br>• மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளக்கப் பயன்படும் கருவி தலா வருமானமாகும்.<br>• தலா வருமானம் உயர்ந்ததால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகக் கருதப்படும்.<br>**தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை**<br>**<u>மொத்த உள் நாட்டு உற்பத்தி</u>**<br>• (GDP – Gross Domestic Product) ஒரு நாட்டில் புவியியல் எல்லைக்குள் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிக்கும்.<br>**<u>நிகர உள்நாட்டு உற்பத்தி</u>**<br>(NDP – Net Domestic Product) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானச் செலவை கழித்தால் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தி. | 5 |

| | | |
|---|---|---|
| | **நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி (-) தேய்மானச் செலவு**<br>**(அல்லது)** | |
| | **ஆ. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்**<br>ஒரு நாட்டின் நாட்டு வருமானத்தை கீழ்க்கண்ட முறைகளில் கணக்கிடலாம்.<br>1. உற்பத்தி முறை<br>2. வருமான முறை<br>3.செலவின முறை<br>**1. உற்பத்தி முறை**<br>நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மற்றும் பணிகளின் ஒட்டு மொத்த மதிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு இம்முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.<br>**2. வருமான முறை**<br>இம்முறையில் நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.<br>**3.செலவின முறை**<br>இம்முறையில் மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு முதலீடு சேமிப்பு மூன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.<br>**(அல்லது)** | 5 |
| | **இ. நலம் நாடும் அரசுகளின் பணிகள்**<br>**பாதுகாப்புப் பணிகள்**<br>ஒரு நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும். எனவே மக்களை அந்நிய நாட்டுப்படையெடுப்பு மற்றும் உள்நாட்டுக் கலவரங்களில் இருந்து பாதுகாப்பதோடு மட்டும் அல்லாமல் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது அரசின் முதன்மைப் பணியாகும்.<br>**நிர்வாகப் பணிகள்**<br>மக்கள் பணியாற்றுவதற்கு சட்ட மன்றம் நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாகச் செயல்படுகிறது.<br>**சமூகப்பாதுகாப்புப பணிகள்**<br>அரசானது சமூகப்பாதுகாப்புப் பணிகளான ஏழைகள் உடல் நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.<br>**பொருளாதாரப் பணிகள்**<br>வேளாண்மை வணிகம் மற்றும் தொழிற்வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. இவ்வாறு அரசு தன் பணிகளை செம்மையாக செயல்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளமாகிறது. | 5 |


| | | |
|---|---|---|
| 52. | **1920 முதல் 1940 வரை ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்** | 5 |

அளவுத்திட்டம்: (1 அலகு = 5 ஆண்டுகள்)




**வரைபடம்:**

**53. a) ஆசியா**




(அல்லது)

**53. b)** ஐரோப்பா



**54.** இந்தியா   (ஏதேனும்  10  மட்டும்)  **10**




************

**செ. ராஜாமணி M.COM., M.Phil.,**

**சீ. வசந்தா M.A., B.Ed.,**

**வரலாற்றுத்துறை**

**ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**

**சக்கராம்பாளையம், அகரம்(அ), எலச்சிப்பாளையம்,**

**திருச்செங்கோடு(தா), நாமக்கல்(மா) - 637202**

கைபேசி**. 80120-31555, 9965782883**